பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை (09.10.2001) தொலைபேசி 3378 ஒலி 302

# அமெரிக்க யுத்த விமானங்கள் ஆப்கானில் நாசகாரத் தாக்குதல்

## 30 பேர் பலி - பலர் படுகாயம் - கட்டடங்கள் தரைமட்டம்

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாக மேற்கொண்ட தாக்குதல் வெற்றிகரமாக நடைபெற்றதெனஅமெரிக்கா அறிவித்துள்ளது.

ஆப்கானின் தலைநகர் காபூல், விமான நிலையம், பாதுகாப்பு அமைச்சு, கண்டகார்விமானநிலையம், மற்றும் பயங்கரவாதிகளின் பயிற்சி முகாம்கள் என சுமார் 30 இலக்குகள் தாக்குதலுக்கு இலக்காகின.

பயங்கரவாதிகளின் முக்கிய இலக்குகளை குறிவைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கானை விட்டு மக்கள் அவசர அவசரமாக கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இங்கு மேற்கொள்ளப்பட்டகுண்டுத் தாக்குதலினால்குழந்தைகள், முதியவர்கள், இளைஞர்கள், பெண்கள்என சுமார் 30 பேர் கொல் லப்பட்டுள்ளதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவினால் தேடப்படும் ஒசாமா பின்லேடன் உயிர் ஆபத்து எதுவுமின்றி ஆப்கானில் இருப்பதாகவும், தலிபான் தலைவர் மௌ. அப்துல்லா பாதுகாப்பாக இருப்பதாகவும் காவூல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கதாக்குதலுக்கு பதில்தாக்குதலாகநடவடிக்கை மேற்கொள்ள தலிபான்கள் தயாராகி வருவதாகவும் செய்திகள் வெளியாகின,

இத்தாக்குதல் குறித்து அமெரிக்கப் பாதுகாப்பு செய

(8ம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பொ. ஐ. ஐ. முன்னணி தோற்றால் ஆட்சி ஐ. தே. கவுக்கு வழங்கப்படும்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(நமது நிருபர்)

"அரசுக்கெதிராக ஐக்கியதேசியக் கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் அரசு தோற்கடிக்கப்பட்டு ஐக்கியதேசியக்கட்சி வெற்றி பெறுமானால் ஜனநாயக முறைப்படி அக்கட்சியிடம் ஆட்சியைக் கையளிக்கவுள்ளேன்".

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் மத்தியில் நேற்று மாலை உரையாற்றுகையில் ஜனாதி

## பாராளுமன்றில் புரட்சிகர மாற்றம் நடக்கும்
### பிரபல சோதிடர் ஆருடம்

(கொழும்பு)

இலங்கைப் பாராளுமன்றத்தில் விரைவில் புரட்சிகரமானதொரு மாற்றம் ஏற்படும் என்று பிரபல சோதிடர் நந்தன விதுருவன் ஆருடம் தெரி

இதனால் அப்போது முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டு, பாரிய நெருக்கடி அரசுக்கு ஏற்பட்டது.

அதேபோன்று தற்போதும் பாராளுமன்றத்தை குறிக்கும்



குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் மத்தியில் நேற்று மாலை உரையாற்றுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு கூறியுள்ளார்.

அரசுக்கெதிராக ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

என்று பிரபல சோதிடர் நந்தன விதுருவன் ஆரூடம் தெரிவித்துள்ளார்.

கடந்த யூன் மாதம் 12ம் திகதி புதனும் செவ்வாயும் ஒன்றையொன்று பார்த்தன. அப்போது புதன்கிரகம் இலங்கையின் லக்கினமாகிய ஞாயிற்றுக்குப் பத்தாவதுவீடாகிய விருட்சிகத்தில் தரித்திருந்தது

அதேபோன்று தற்போதும் பாராளுமன்றத்தை குறிக்கும் லக்கினமாகிய 11 வது வீட்டில் புதன் சஞ்சரிக்கின்றான் இதனால் பாராளுமன்றில் பெரும்மாற்றங்கள் ஏற்படும் என்று சோதிடர் விதுருவன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது அர

(08ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்காவிற்கு இலங்கை முழு ஆதரவு

## கதிர்காமர் அறிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை அழித்தொழிக்க அமெரிக்கா எடுக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் இலங்கை தன்னாலான முழு ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கும்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், ஐ.நாசபைக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

அமெரிக்க நகரங்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் வன்மையான பயங்கரவாதச் செயல், நீதியை நிலைநாட்ட எங்கு வேண்டுமானாலும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பு நாளை மறுதினம்

## சபாநாயகர் அனுரா அறிவிப்பு!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கெதிராக ஐக்கியதேசியக்கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை மறுதினம் வியாழக்கிழமை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப் பட்ட முடிவையே அவர்அறிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் நாளை மறுதினம்விவாதத்திற்கு எடுத்துக்

(8ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்வரும்பொதுத்தேர்தலில் 'ஐக்கியதேசிய முன்னணி' அமைத்து போட்டியிடுவதென ஐ.தே.க.முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியமுன்னணி என்ற புதியதோர் அணியை அமைத்து போட்டியிடுவதென ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்காவின் தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில்,

நம்பிக்கையில்லாத் தீர்மா

[08ம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் மாணவிகளை காணவில்லை

(கொழும்பு)

கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி மாணவிகள் நால்வரைக் காணவில்லையென அவர்களின் பெற்றோர்களால் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கேள்வி அறிவித்தல்

## சமைக்காத உணவுப் பொருட்கள் வழங்குதல்

## அரசினர் பொது வைத்தியசாலை யாழ்ப்பாணம்- 2002

உணவுவகைகளுக்கு நல்ல விலை வீதங்களை நிச்சயப்படுத்திக் கொள்வதன் பொருட்டு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையான கேள்விச்சபையின் தலைவரால் ஒருவருடகாலப் பகுதியின் போது யாழ்ப்பாணம் அரசினர் பொது வைத்தியசாலைக்கு கீழே குறிப்பிடப்படும் உணவு வகைகளைத் தொடர்ச்சியாக வழங்குவதன் பொருட்டு இலங்கைப் பிரஜைகளிடமிருந்தும் ,நிறுவனங்கள், கம்பனிகள் என்பவைகளிடமிருந்தும், வழங்கலாளர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

### உணவுகளின் வகைகள்

1) பேக்கறி உற்பத்திகள்
2) உலர் உணவு
3) புதிய மரக்கறி வகைகளும், பழங்களும்
4) இறைச்சி, மீன், முட்டை
5) நானாவித உணவுப் பொருட்கள்

2. மீளப்பெறமுடியாத ரூபா1000/-ஐஇவ்வலுவலகத்தில் செலுத்திய பற்றுச்சீட்டையும் தமதுதேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து 2001. 10.21 ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரை இதற்கான கேள்விப் பத்திரங்களை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்;

3. கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களையும் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் அதனுடன் கேள்விப் பிணையும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

i) இயக்கம் பதிவு செய்யப்பட்ட அல்லது சட்ட பூர்வமாக்கப்பட்ட சான்றிதழ்

ii) வருமானவரி திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட மிகவும் அண்மையான இரண்டு ஆண்டுகளின் பொருட்டு வரியினின்றும் விடுவிக்கப்பட்ட சான்றிதழ் (உறுதி செய்யப்பட்ட நிழற்படப்பிரதிகள்)

iii) கடந்த இரண்டு ஆண்டுகளின் பொருட்டு கணக்காய்வு புரியப்பட்ட கணக்கீட்டு அறிக்கை

iv) நிதி நிலைமை தொடர்பாக வங்கியாளர்களின் சான்றிதழ்;

v) தொலைபேசி, போக்குவரத்து, களஞ்சிய வசதிகள் (தேவைப்படின் குளிர் அறைகள் உட்பட) இருப்பதை நிரூபிப்பதற்கான எழுத்து மூல சான்றுகள்.

vi) அரசாங்கத்தின் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு சமைக்காத உணவுப் பொருட்களை வழங்குதல் தொடர்பாக மூன்றாண்டுகள் அனுபவம் உண்டு என்பதற்கான சான்றிதழ்.

4. கேள்விப் பத்திரங்களை இட்டு அனுப்பும் உறை முத்திரையிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் 'யாழ்ப்பாணம் அரசினர் பொது வைத்தியசாலைக்கு 2002 ஆம் ஆண்டின் போது உணவுப் பொருட்கள் வழங்குதல்' எனக் குறிப்பிட வேண்டும் என்பதுடன் 2001. 10. 23 ஆம் திகதி மு.ப 10.00 மணி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக தலைவர் உணவுப் பொருட்களின் பொருட்டு நல்ல விலை வீதங்களைக் குறிப்பிட்டுக் கொள்வதன் பொருட்டு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான கேள்விச்சபை, சுகாதார சேவைகள் திணைக்களம், 385, வணபத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு-10 என்னும்' முகவரிக்கும் பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது சுகாதாரத் திணைக்களத்தில் இரண்டாம் மாடியில் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் (நிதி) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.

5. கேள்வி மூடப்பட்டு உடனேயே திறக்கப்படும் என்பதுடன் கேள்வியாளருக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்றுள்ள பிரதிநிதிஒருவருக்கு இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

6. அரசாங்கத்தின் ஒப்பந்த நிபந்தனைகளை மீறிக் குற்றக்குறிப்புகளை பதிவேட்டில் இடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு அல்லது பேர்வழிகளுக்குக் கேள்விப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

7. கேள்வி ஆவணங்களை கேள்விப்பிணைப்பெறுமதியுடன் கட்டணம் எதுவும்செலுத்தாது இவ் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

8. மேலதிக விபரங்களுக்கு சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர்(நிதி)பாதுகாப்பும் கூட்டிணைப்பும் பிரிவிலும் இவ் அலுவலகத்திலும் தொடர்பு கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி (செல்வி)
நவமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்.

08.10.2001 (கி-2694)

யாழ். பல்கலைக்கழக

# நுண்கலைப் பீடத்திற்கு தெரிவான மாணவர் பெயர்கள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 2000/2001 ஆம் ஆண்டிற்கான நுண்கலைமாணி (இசை, நடனம்) கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர்விபரங்களை நேற்று பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

இசை (நுண்கலைமாணி) கற்கைநெறிக்கு அனுமதிக்கப்பட்டோர் விபரம் வருமாறு;

பி. தாஷா, வி. காயத்திரி, கே. ஜீவானந்தி, எஸ். ஜெயந்திமதி, எஸ். ஜெனிஸ்சங்கர், எம். கோமளா, கே. கோகுலவாணி, சி. கிஷாந்தினி, ஜே. மேரிடல்சினி, ஆர். மீரா, வி. மங்கையர்மணி, எஸ். நிலாணி, கே. புஸ்பலக்சுமி, ரி. பத்மினி, ரி. ரஞ்ஜித்குமார், கே. ராதிகா, கே. ராகிணி, பி. சுகுணா, பி. சியாம்மகிருஷ்ணா, எஸ். சங்கீதா, ஆர். சோபா, ரி. செந்தில்நாதன், எ. சுவீற்றி, எம். சீமதி, எஸ். சிவசந்திரிகா, வி. சுகன்யா, ரி. சத்தியாம்பாள், எஸ். சத்தியப்பிரியா, யு. சங்கீதா, என். சங்கீதா, எஸ். விநோதினி, ஆர். வனஜா, கே. துமிலா, கே. வாசுகி, ரி. ஜஸ்மினி, எம். ஜாலினி, எ. ஜீவதனி, எம். ஜெயமாலினி.

ரி. கமலசுதன், கே. கோகுலன், பி. குமுதினி, கே. சுஜந்தினி, எம் கீதன், எஸ். நந்தகோபன், ஜே. பிருந்தா. ஆர். ரஞ்ஜனி, டி. சீ, ரெஜினா, எஸ் ரஞ்ஜிதராணி வி. சிறிரதி, எஸ். சுபாஜினி, எஸ், சுவிதாஜினி, எஸ். சுதாமதி, வி. சிவமூர்த்தி, எஸ். சுபதர்சினி, கே. சர்மிளா, கே. சுகர்னன், ஆர். சர்மிளா, எஸ் சர்மிளா, எஸ். கஜந்தி, வை துஷாந்தி எம். தர்சினி, வி வேணுகா, எஸ். வரதாஜா, கே. வானதி, ரி. விஜயகுலசிங்கம், ரி. ராதிகா, பி. பங்யோசனி, என் தெய்வேந்திரராஜா, பி. விதுஷா, கே. தர்மிகா, கே. செல்வமோகன், ஆர். ஜெயகாந்தன்.

நடனம். (நுண்கலை மாணி) கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்டோர்விபரம் வருமாறு.

கே. அஜந்தா, எ. அகிலா, கே. பவானி, எஸ் பேலின்சைலா, எம். டுபாயினி, எம். கோபிஜா கே. காயத்திரி. கே. கௌரி. பி. ஜசிந், வி. ஜெயாலினி, கே. கவிதா. எம். கஜாலினி, எஸ். குணாநிதிஎஸ். கேதாரணி, கே. சுஜிதா, ரி. மென்மொழி, பி. ஜேசுசன், வி. பிரபா, ரி. பிரமிளா, ஆர். நீரஜா, எஸ் நிமாலினி, ஆர். ரம்மியாஜினி பி சசிகாந்தன், பி. சுபரஞ்சினி, எம். சுல்பிகா, ஆர். சிவாணி, பி. சத்தியபிரியா, ரி சுதர்சினி ரி. சித்திரகலா, வா. சுஜித்தா, கே. சிறிரம்மியா, எம். சுனிதா, எஸ். தேவநிதி, ரி. தமிழினி வலென்ரினா, கே. துர்க்கா, ரி. துஷாமினி, ஆர். விஜாகினி, வி விசாமினி, பி வைதேகி ஆர். வேணுகா, ரி. லஜிதா, ஆர். அருந்ததி, என். அனுசுயா, வி. பாமினி, ரி. இதயராணி, எஸ். கௌதமி, என் மேரி, எ. நித்தியா, எஸ். ரொசிங்ரா ஜெஸ்மின், எஸ் ரஜித்தா, எஸ். சசிலதா, வி. சசிதா, எம்.

((08ம் பக்கம் பார்க்க)

# இராசி பலன்

09- 10- 2001
(புரட்டாதி 23 செவ்வாய்)
ஸப்தமி மு. இ. 7. 13வரை
திருவாதிரை பி. இ. 2. 04 -வரை

இராகு காலம்: 3. 02- 4. 32
சுபநேரம்: 10. 32- 12. 02

**மேடம்**
சகோதர உதவி, பிரயாணம், அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை.

**இடபம்**
வீண்விவாதம், பொருள் விரயம், செல்வாக்கு, காரியம் கைகூடும்.

**மிதுனம்**
நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், பெரியோர் ஆசி,

**கடகம்**
தந்தைவழிஉறவு, அரச நன்மை, மனக்கிலேசம், காரிய தாமதம்.

**சிங்கம்**
நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், கீர்த்தி, குடும்ப நன்மை.

**கன்னி**
கடினஉழைப்பு, சுபநிகழ்வு, நல்ல செய்தி, காரியம் கைகூடும்.

**துலாம்**
வீண் அச்சம், உடல் உபாதை, அதிகாரம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
பிரயாண பயம், உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், உடல் சோர்வு.

**தனுசு**
நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, கௌரவம், பொருள் சேர்க்கை.

**மகரம்**
மனமகிழ்ச்சி, உடல் நலம், திடீர் பயணம், காரியம் கைகூடும்.

**கும்பம்**
தாழ்வுநிலை, தனவரவு, பிரயாண தாமதம், முயற்சி மந்தம்.

**மீனம்**
மனச்சோர்வு, ரோகபயம், திடீர்நன்மை, காரியதாமதம்:
(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது.)

வளவன்

# வாழ்த்துகிறோம்

யா / கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாகிய

| | |
|---|---|
| ஜெ. நிரோஜனி | 147 |
| வ. விதுலன் | 141 |
| நி. டிஜானி | 120 |
| மா. நிக்ஷலா | 120 |
| ர. திவியா | 119 |

ஆகியோரை பாராட்டுவதோடு இவர்களுக்கு ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்;

(கி-2695) -பெற்றோர்கள்

## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 20. 10. 2001 for the undermentioned posts.

### 1. Assistant Lecturer (on Contract) in EDUCATION/ANTHROPOLOGY / HOME ECONOMICS.

★ Preference will be given to those who are possessing a degree in physical Science/Biological Science and relevant Post-Graduate qualification for the post of Assistant Lecturer (on contract) in Education.

SALARY : Rs, 10, 800/- p.m (FIXED)

### 2. Visiting Instructors For Diploma Course in Physical Education:

Gymnastic/Athletie/Netball/Table/Tennis/Soccer/ Cricket/ Badminton/ Hockey/ Basket ball/ Volley ball.

RATE OF PAYMENT: Rs. 150/- perhour,

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ EStablishments, University of Jaffna, SriLanka either in person or by sending a Money Order for Rs 20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23 x 10 cm in size.

Applicents from the University System/Government Departments Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be reiected without intimation.

Registrar

University of Jaffna,
Sri Lanka.
08th October 2001

(கி-2696)

# சைவ சித்தாந்தக் கல்வியும் பரத நடனமும்

யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலைஅரங்கில் நேற்று 8ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெற்ற சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையின் போது பேராசிரியர் சபா ஜெயராசா "சைவ சித்தாந்தக் கல்வியும். பரத நடனமும்" என்னும் தலைப்பில் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

ஆ-ர்.

தமிழகத்துப் பூர்வீக நடனங்கள், மற்றும் கிராமிய நடனங்கள் வளமான ஆடற் பின்புலத்திலிருந்தே பரத நடனம் கூர்ப்பு எய்தியதென்று கொள்வதற்குப் பரந்து பட்ட ஆதாரங்களைக் காட்டமுடியும.

புறநானூறு (29) பரிபாடல் (21) பொருநராற்றுப்படை (108-110) சிலப்பதிகாரம் முதலாய இலக்கியங்களிலே பண்டைய தமிழகத்து ஆடல்கள் பற்றிய செய்திகள காணப்படுகின்றன. கூத்து. ஆடல் முதலாம் எண்ணக் கருக்களே அங்கு பயன்படுத்தப்பட்டன. வரன் முறையான கல்விக்கும், பயிற்சிக்கும் உட்பட்ட ஆடலும் அரங்கேற்றமும் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்திலே காணப்படுகின்றன.

ஒரு புறம் வரன்முறையான கல்விக்கும் பயிற்சிக்கும் உட்பட்ட செந்நெறி ஆடல்களும் மறு புறம் கிராமிய நடனங்களும் சமாந்தரமாக நிலவி வந்தமை உலக நடன வரலாற்றிலே காணப்படும் பொதுப் பண்பாகும். வரன் முறையான கல்விக்கும் பயிற்சிக்கும் உட்பட்ட நடனத்தை விளக்க வந்த மணிவாசகர் "நள்ளிருள் நடம் பயின்றாடும் நாதனே" என்று சிவபுராணத்திற் குறிப்பிட்டுள்ளார். மாயவித்தை நடனங்கள் கருவளப் பெருக்கு நடனங்கள், சமூக நடனங்கள் முதலியவை அறிவு வளர்ச்சி, கல்விவளர்ச்சி, கருத்தியல் வளர்ச்சி என்பவற்றால் மெருகு பெறுதலும், வியாக்கியானங்கள் பெறுதலும் நடன வரலாற்றிலே காணப்படும் பிறிதொரு பண்பாகும்.

## தொன்மங்கள்

கல்வி வளர்ச்சியின் போது தொன்மங்களின் (Myths) வலிமை கண்டறியப் படும் போது "ஆடல்களைத் தொன்மப்படுத்தல்" என்ற செயற்பாடு இடம் பெறும். அதாவது தொன்மக்கதைகளையும் நம்பிக்கைகளையும் ஆடலாக்குதலும் ஆடலைத் தொன்மப்படுத்தலும் என்ற அறிகைத்தொழிற்பாடும் அழகியல் சார்ந்த தொழிற்பாடும் நிகழும். சிவனை ஆடல் வல்லவனாகக் காணும் தொன்ம உணர்வு தமிழகத்து மெருகு பெற்ற செந்நெறி ஆடல்களின் வலிமைக்கு அடித்தளமாயிற்று "இலிங்கமாவது எண்ணெண் கலைகளும்" என்று திருமூலரும் "கலைக்கெல்லாம் பொருளாய்" என சுந்தரரும் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

மேற்கூறிய கருத்தின் வலிமை கொண்ட பெரு வளர்ச்சியை தஞ்சைப் பெருவுடையார்கோவிற்கரண சிற்பங்களிலே காணக் கூடியதாகவுள்ளது:



## செந்நெறி நடனம்

பதினாறாம், பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களும். பண்பாட்டுத் தாக்கங்களும் தொலை தூரத்துக்கிராமங்களிலே காணப்பட்ட நாட்டார் நடனங்கள் மீது அதிக செல்வாக்குச் செலுத்தவில்லை. ஆனால் தமிழகத்துச் செந்நெறி நடனமாகிய பரத நாட்டியத்தின் மீதே அவை செல்வாக்குச் செலுத்தின; அலாரிப்பு, தோடயமங்களம், தில்லானா, போன்றவற்றில் தமிழகத்து வடபாலிருந்த செல்வாக்குகள் இழையோடத் தொடங்கின தமிழகத்து நாட்டார் நடனங்கள் கிராமிய வாழ்வுடனும், வழிபாட்டுடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தமையால் புதிய பண்பாட்டினதும், கலை விசைகளினதும் தாக்கம் அவற்றின் மீது ஊடுருவவில்லை.

பரத நடனம் நகரங்களை அடியொற்றி வளர்ந்து வந்தமையாலும். சமஸ் கிருதமயப்பட்டு நின்றமையாலும், தமிழகத்துக்கு வடக்கேயிருந்து வந்த செல்வாக்குகளை இலகுவாக உள்வாங்கியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற் பகுதியில் வாழ்ந்த தஞ்சைச் சகோதரர்களாகிய பொன்னையா, சின்னையா, சிவானந்தம் வடிவேலு ஆகியோர் பரதநாட்டியக்கச்சேரி முறைமையை ஒழுங்கு படுத்திய பொழுது செந்நெறி நடனமாகிய பரத நடனத்துல ஏறபட்டஅனைத்துவளர்ச்சிகளையும், கர்நாடகசங்கீதத்தில்ஏற்பட்ட தொடர் முறையான வளர்ச்சிகளையும் ஒன்றிணைத்தனர்.

## அடிப்படை அலகு

பரத நடனத்தின் அடிப்படைஅலகாகக் காணப்படுவது அடவு ஆகும். அடையப்படுவதே 'அடவு' ஆயிற்று. பரத நடனத்தில் சுமார்120 அடவுகள் உள்ளன. தமிழகத்துப் பாரம்பரிய கிராமிய நடனங்களில் இருந்து கூர்ப்படைந்து வந்த அடவுகளைத் தஞ்சைநால்வர் ஒழுங்குபடுத்தியமைத்தனர்;

பண்ணிசையானது கர்நாடக இசைக்கு ஒருவகையில் தளமாகவும் வளமாகவும் இருந்தமைபோன்று தமிழகத்துக் கிராமியநடனங்கள் பரத நடனத்தின் வளர்ச்சிக்குப்பின் புலமாக அமைந்தன. கர்நாடக இசைக்கு அடித்தளமாக அமையும் ஏழொலிகள் (சப்த ஸ்வரங்கள்) என்பன வரன் முறையான கல்வியின் பயனாய் அமைக்கப்பட்டமை போன்று தமிழகத்திலே வளர்ச்சியுற்ற வரன் முறையான கல்விச் செயற்பாடுகள் பரத நடனத்தின் அடித்தளமாக அமையும் அடவுகளின் கட்டமைப்பை உருவாக்கின.

## சிவநடன ஆக்க மலர்ச்சி

தமிழகத்தில் எழுந்த பத்தி நெறியும், சைவ இலக்கியங்களும் பரதநாட்டியத்துக்கும் சிவ வழிபாட்டுக்குமிடையே காணப்பெற்ற கருத்தியலை வளம்படுத்தின. சிவமதக் கருத்தியல் சிவவழிபாடு, சிவ அழகியல், திருக்கோயில்நெறி முதலியவற்றின் ஒன்றிணைப்பில் சிவ நடன ஆக்கம் மலர்ச்சியுற்றது. பத்தி நெறியின் சிறப்பியல்பாக அமைவது முரண்படும் இரு பரிமாணங்களுக்கிடையே இணக்கத்தை ஏறபடுத்தியமையாகும். சிவனை அழித்தற் பிரானாகவும், ஆக்கற பிரானாகவும் காணுதல், அன்பின் வடிவினராகவும், அச்சத்தின் வடிவினராகவும் காணுதல் என்றவாறு முரண்படுபண்புகளுக்கிடையே இணக்கத்தைக் காட்டுதல் சிவப்பத்தி நெறியின் உள்ளடக்கமாக அமைகின்றது. இந்த முரண்பாடுகளின் இணக்கம் ஆடல் அழகியலுக்கு மெருகு தருகின்றது.

## சைவசித்தாந்தம் தரும் கலைச்சிறப்பு

சைவ சித்தாந்தம் தரும் பிறிதொரு கலைச்சிறப்பாக அமைவது ஆண்-பெண் இணக்கப்பாடாகும். இறைவனை அம்மையப்பராகக் காணுதல் சிவபத்தி நெறியிலே காணப்படும் பிறிதொரு சிறப்புப் பண்பாகும். இந்த இணக்கத்தை மணிவாசகர்,

"பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கு ஒளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி

என்று திருவெம்பாவையிலே குறிப்பிடுகின்றார்; ஆண்-பெண் என்ற பால் நிலை வழிபாட்டு அணுகுமுறையானது தொல்குடிமக்களது வணக்க முறைமையின் பாற்பட்டதாயினும் அதற்குரிய அன்பு தழுவிய இணக்கம் பத்தி நெறிக்காலத்திலே பரிணமித்துச் செல்வதைக் காணலாம். ஆண்-பெண் அணுகு முறையும், தாண்டவ லாஸ்ய ஆடல் வகைகளும், பரதநாட்டியத்தின் செறிவு மிக்க வெளிப்பாடுகளாகின்றன.

சைவ சித்தாந்த நெறியூடே வளமூட்டப்படும பிறிதொருகல்விக் கருத்தாக அமைவது இயற்கை முரண்பாடுகளின் ஒன்றிணைப்பைச் சிவத்தின் வாயிலாக விளக்குதலாகும். சிவன் அனலைக் கையிலேந்துதலும், புனலைத் தலையிற் சூடியிருத்தலும், மேற்கூறிய கருத்தை மீளவலியுறுத்தி நிற்கின்றன.

## மறைஞானக்கற்பனை

கூட்டு வாழ்க்கையிலிருந்து பத்தி நெறிவளர்ச்சியுற்றமையால் தனி மாந்தர் உணர்வுகளுக்குப்பதிலாகபொதுவான உணர்வுகளும் கூட்டு மன வெழுச்சிகளுமேலோங்கிநின்றன. குழுவின் தேவைகளைக் கற்பனை நிலையித எய்துவதற்கு தெய்வீகவிரிசிந்தனை துணை செய்தது. தெய்வீகக் கற்பனையின் மேம்பட்ட வடிவமாக மறைஞானக்கற்பனை (MYSTIC IMAGINATION) அமைந்தது. தெய்வீகக் கற்பனைக்கும் மறைஞானவியப்புக்கும் உரிய காட்சி வடிவமாக சிவநடனம் முகிழ்த்தது.

தெய்வீகக் கற்பனைகள் நாளாந்த வாழ்க்கையை நோக்கியும் இயற்கை நிகழ்ச்சிகளை நோக்கியும் திரும்பிய வேளை, இயற்கை மாற்றங்கள், பருவகாலங்களின் அசைவுகள் தொடர்ந்து நிகழும் காற்று, நீர், மற்றும்வானிலை இயக்கங்கள் முதலியவற்றை ஆடல் வாயிலாகப் பொருத்தமாகக் காட்ட முடிந்தது. அவ்வாறான ஆடலில் இயற்கை நிகழ்ச்சிகளும் தெய்வீகக் கற்பனைகளும் ஒன்று சேர்ந்து கலந்திருந்தன.

## செப்பமான அடிப்படையுள்ள பரதநாட்டியம்

சைவசித்தாந்த அறிகையை அழகியல் வடிவிலே கையளிக்கும தொல்சீர் கலை வடிவங்களிலே பரதநாட்டியம்தனித்துவ மானதாகப் படிமலர்ச்சி கொண்டுள்ளது. சைவ ஆலயங்களை நிலைக்களமாகக் கொண்டு கையளிக்கப்பட்டு வந்த பரத நாட்டிய ஆற்றுகைக்கு தஞ்சை நால்வர்கள் கச்சேரியமைப்புக் கொடுத்து அதன் அமைப்பியற் கட்டுப்பாடுகளை வலிதாக்கினர். சைவம் என்பது முடிந்த முடிபாக இருத்தல் போன்றுபரத நாட்டிய அடிப்படையும் செப்பமாக்கப்பட்ட மீறவியலாக்க கட்டமைப்பைக் கொண்டுள்ளது. □

# வெளி நாட்டுத் தபால்கள் தபால் திணைக்களம் கையாளும்

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திஹூடாகநடை பெறும் வெளி நாட்டுத் தபால்கள்மற்றும் தபால் பொதிகளை கையாளும் நடவடிக்கைகளை இலங்கை தபால் திணைக்களம்நேரடியாக மேற்கொள்ளவுள்ளது.

இந்த புதிய நடைமுறை நேற்று நள்ளிரவுமுதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது;

இப்பொதிகளை கையாள்வதில் இடம் பெற்றமுறைகேடுகளை அடுத்தே இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தபால் திணைக்கள அதிபர் தெரிவித்துள்ளார்; (எ-4)

## மின்சாரம்இல்லை

(நீர்வேலி)

நீர்வேலி வடக்கு, சிறுப்பிட்டிப்பகுதிகளுக்குமின்சாரம் வழங்கும் நடவடிக்கையாக பழைய மின்கம்பங்கள் அகற்றப்பட்டு புதிய கம்பங்கள் நாட்டப்பட்டு வருகின்றன; ஆனால் நீர்வேலி தெற்கு கரந்தன்வீதிக்குபுதிய மின்கம்பங்கள் நாட்டப் பட்டுஇரு வருடங்களுக்கு மேலாகியும் மின்சாரம்வழங்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-234)

# அ. அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

குசாம்புலம் குப்பிளான் என்ற முகவரியைச் சேர்ந்த சண்முகம் சம்பந்தன் மற்றும் ஈவினை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கந்தையா முத்துத்தம்பி ஆகியவர்களுடைய விசேட அடையான அட்டைகளும்.

புலோப்பளை மேற்கைச் சேர்ந்த சண்முகம் பரிமளம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (உ)

# தொ. நு. கல்லூரியில் 6 கணனிகள் பழுது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரியில் பாவனையில் இருந்த கணனிகளில் 6 பழுதடைந்து விட்டதாகத் தெரியவந்துள்ளது.

இதனால், தொழில்நுட்பக் கல்லூரியில் கணனி தொடர்பான கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள் பெரும் பின்னடைவினை எதிர் கொண்டுள்ளதுடன்,

நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றுவதிலும் சிரமங்கள் நிலவுவதாக அறியப்படுகிறது. (உ-19)

## காணி அன்பளிப்பு

(வரணி)

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மைதானப் பாவனைக்கென அப்பகுத் தனிநபர் ஒருவர் 4 பரப்புக் காணியை அன்பளிப்பு செய்துள்ளார்; (உ-221)

## வீதி சீர்கேடு

(கந்தர்மடம்)

கந்தர்மடம் அரசடி வீதி வாய்க்கால் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதாகவும் வீதியின் ஓரங்கள் உடைந்து கொண்டுவருவதால் அப்பாதையால் செல்லும் வாகனங்களும் மக்களும் சிரமப்பட வேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்; (எ-37)

# உள்ளத்திலே நல்ல சிந்தனைகள் இருந்தால்

# நாடுபோற்றும் எழுத்தாளராக திகழ முடியும்

## நூல்வெளியீட்டுரையில் 'சிற்பி' கருத்து

(யாழ்ப்பாணம்)

உள்ளத்திலே நல்ல சிந்தனை உணர்வுகள் இருந்தால் நாடு போற்றும் நல்ல எழுத்தாளராக வரமுடியும். அது மட்டுமன்றி ஒரு உன்னதமான வாழ்வினையும் அமைத்துக் கொள்ளலாம். அந்த வகையில் கல்வி, கலை, கலாசார, அரசியல் மற்றும் பொருளாதார எதிர்கால தீர்க்க தரிசனத்துடனும் தீட்சணியத்துடனும் 'இங்கிருந்து சிறுகதைத் தொகுதி, வெளிவந்துள்ளது.

பன்னிரண்டு புதிய தலைமுறை எழுத்தாளர்களின் 'இங்கிருந்து' சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கோகுலராகவன் தலைமையில் நடைபெற்றபோது வெளியீட்டுரை நிகழ்த்திய 'சிற்பி' சிவசரவணபவன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; இந்தக் காலம் சோகமயமாகத் தோன்றினாலும் இது எமக்கு வீரயுகக் காலம். இக்காலத்தில் வெளிவரும் சிறுகதைகள் மக்களின் உணர்வுகளை தெளிவாக முன்வைப்பனவாக அமைந்துள்ளன. இதனையே கைலாசபதி அவர்களும் கூறினார். 'இங்கிருந்து' சிறுகதைகள் இங்கிருந்து என்ன செய்கிறோம்? இங்கிருந்து எங்கே செல்லப் போகின்றோம்? என்ற வினாக்களை எம்மிடையே தோற்றுவிக்கும்திறன் கொண்டவையாக அமைந்துள்ளன என்றார்.

நூலின் மதிப்பீட்டுரை நிகழ்த்திய செம்பியன் செல்வன்.

'காட்சிகளைத் திரிபுபடுத்திஅவற்றை ஆவணமாக்கியுள்ளோம். அச்சம் காரணமாக உண்மைகள் திரிபுபடுத்தப்படுகின்றன. இது ஆரோக்கியமான நிலைமை அல்ல. இன்று எழுத்தின் சுட்டு விரல் எதை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. அது செல்லும் திசையை நோக்கினால் அதனால் வரலாற்று மயக்கமே தோற்றுவிக்கப் படும்.

எனினும் யாழ். மண்ணிலிருந்து வெளிவரும் ஆக்கங்களுக்கும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலிருந்து வெளிவரும் படைப்புகளுக்கிடையே நிறைய வேறுபாடு இருக்கிறது.

காலத்துக்குக் காலம் இலக்கிய வடிவங்கள் மாறும்; தன்மைகள் மாறும்; இரசனைகள் மாறும். ஆனால் இலக்கிய கர்த்தாக்களுக்கும் ரசிகர்களுக்கும் இடையே புரிந்துணர்வு இருத்தல் வேண்டும்.

அ. யேசுராசா மதிப்பீடு நிகழ்த்தும் போது;

இலக்கியச் செயற்பாடுகள் ஆழ்மனத்துடன் தொடர்புடையன. அதனால் சிறுகதைகளில் குறியீடுகளைக் கையாளுகின்ற போது ஒரு அபாயம் ஏற்படுகிறது.

அதேவேளை மொழிநடை கூட கதையைச் சிதைக்கின்றது. அதனால் மையக்கரு நொருங்கி விடுகின்றது.

ஒரு படைப்புக்கு மொழியாற்றல் அவசியம் இது ஈழத்தில் பல எழுத்தாளர்களிடம் இல்லை படைப்பின்முற்பகுதி யதார்த்தமாகவும் இறுதி குறியீடாகவும் வரும். போது அப்படைப்பில் வலிந்து ஒட்டப்படும் உணர்வு ஏற்படுகிறது. இதனால் முழுமை சிதைக்கப்படுகிறது என்றார்.

வாழ்த்துரைகளை செங்கை ஆழியான், யாழ். இந்து அதிபர் அ. சிறிக்குமரன் ஆகியோர் நிகழ்த்தினர். (க-106)

## செய்முறைப் பரீட்சை

(துன்னாலை)

யாழ் இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்திலிருந்து க.பொ.த(சா,த) பரீட்சைக்குதோற்றவிருக்கும் மாணவர்களுக்கான செய்முறைப்பரீட்சைகள்மேற் படி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன,

பரீட்சைக்கு இரண்டாம் தடவை தோற்றும் மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களும் பின்வரும் தினங்களில் பாடசாலைக்கு வருகை தந்துசெய்முறைப் பரீட்சைக்கு தோற்றுமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த வகையில், இன்று மனையியல்செய்முறைப்பரீட்சையும் நாளை புதன்கிழமை சங்கீத செய்முறைப் பரீட்சையும்' வியாழக்கிழமை விவசாய செய்முறைப் பரீட்சையும் இடம்பெறவுள்ளது. (உ-41)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**சேர் பொன் இராமநாதன்**

**நினைவுப் பேருரை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வருடா வருடம் யாழ்.பல்கலைக்கழக அமைவிடத்தின் ஸ்தாபகரான சேர் பொன் இராமநாதன் அவர்களை நினைவுகூரும் வகையில் நினைவுப் பேருரை நடாத்தப்பட்டு வருகின்றது. இவ்வருடம் இப்பேருரையை இந்தியாவின் தமிழ் நாட்டைச்சேர்ந்த சேக்கிழார் அடிப்பொடி தில்லைஸ்தானம் நடராஜன் இராமச்சந்திரன் அவர்கள் ''பெரியபுராணத்தில் சமுதாய சிந்தனைகள்' எனும் தலைப்பில் இன்று(2001.10.09) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தவுள்ளார்.

**ஆர்வலர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்**

துணைவேந்தர்

[C-2691]

## அமைச்சர்கள்குறைந்தாலும் செலவு குறையவில்லை

### ஐ.தே.க. எம்.பி. குற்றச்சாட்டு

[கொழும்பு]

ஜே.வி.பியோடு அரசு செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கேற்ப அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 ஆக குறைத்துள்ள போதிலும் செலவினத்தை கட்டுப்படுத்த முடியவில்லை என ஐக்கியதேசியக்கட்சியின் உபதலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காமினி அத்துக்கோறளை தெரிவித்துள்ளார்,

கக்குனு கொல சுயம்பலாகஸ் கொட்டுவ முஸ்லிம் மகா வித்தியாலத்தில் நடைபெற்ற ஜே. ஆர். ஜெயவர்த்தன ஞாபகார்த்த நூலகத்திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - செலவினத்தைக் குறைப்பதற்காக அமைச்சர்களின் எண்ணிக்கையைஅரசு குறைத்த போதிலும் மாதமொன்றிற்கு ஐந்து மில்லியன் ரூபா வையாவது மீதப்படுத்த முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது;

இந்நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசை தோற்கடிப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்த இடதுசாரிக் கட்சிகள் நீடித்து நிலைப்பதில்லை என்பதுடன் மக்கள் விடுதலை முன்னணி அதனையே எதிர் நோக்கும் என்று மேலும் தெரிவித்தார்;

[ந-4]

## ஜே.வி.பியின் பிரசாரத்தால் அமைச்சர்கள் விசனம்

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தனது பிரசாரக்கூட்டங்களில் அரசைக்குறைகூறி வருவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் முக்கிய அமைச்சர்கள் விசனம் தெரிவித்திருப்பதுடன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்;

விவசாயிகளின் கடன்கள் ரத்துச்செய்யப்பட்டமை 17வதுதிருத்தசட்டம்போன்றவற்றைத் தாமே கொண்டு வந்ததாக ஜே. வி. பியினர் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் சுதந்திரக்கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் மக்கள் மத்தியில் உள்ள ஆதரவு குறைந்து வருவதனால் அரசாங்கம் பெருமளவில் பாதிக்கப் பட்டு வருவதாக ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளார்கள். (வ)

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை யாத்திரை ஸ்தலத்தின் ஐப்பசி மாத திருநாள் திருப்பலி நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

12 ஆம்திகதி நற்கருணை வழிபாடு, 13 ஆம் திகதி யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகத்தின் தலைமையில் திருநாட் திருப்பலியும் திருச்சொரூப ஆசீரும் இடம் பெறவுள்ளது; (க-07)

## கிரிக்கெற் சுற்றுப்போட்டி

(வல்வெட்டித்துறை)

தயா நகைப்பூங்கா ஆதரவில் வானவில் விளையாட்டுக் கழகம் யா/கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் நடத்திவரும் கிரிக்கெற் போட்டியில் நாளை, பி. ப 4 00 மணிக்கு அம்மன்(ஏ) வி. க. எதிர் அச்சுவேலி மத்தி வி.க.மோதவுள்ளன. உ-21

# கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்களுக்கு சலுகை

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி ஆசிரியர்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்களை கஷ்டப் பிரதேசங்களில் சேவைக்கு அமர்த்தும்திட்டமொன்றை அமுல்ப்படுத்தப் படவுள்ளதாக கல்வி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்,

இது குறித்து அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது

கஷ்டப் பிரதேசங்களில் ஐந்து வருடங்கள் கடமையாற்ற வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இத்திட்டம்நடைமுறைப்படுத்தப்படவுள்ளது;

இத்திட்டத்தின் கீழ்கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்ற விரும்பும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வீட்டுவசதிகள் உட்பட பலவசதிகளும் அவர்களின் பிள்ளைகளுக்கு பிரபல பாடசாலைகளில் கல்வி பயிலும் வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது

கஷ்டப் பிரதேசங்களில் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கும், அப் பிரதேசங்களில் கற்பிக்க விரும்பும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் நோக்கிலுமே இப்புதிய திட்டம் அமுல்ப்படுத்தவுள்ளதாக அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ந-4

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

தொடர்ச்சி

ஒக்டோபர்மாதம் 5 ஆம்திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### நல்லூர்

| | |
|---|---|
| 206686 ஏ | 206686 பி |
| 206686 சி | 208493 ஏ |
| 208709 ஏ | 208709 பி |
| 211918 ஏ | 211918 பி |
| 212066 ஏ | 212066 பி |
| 212144 ஏ | 212144 பி |
| 212168 ஏ | 212198 ஏ |
| 212198 பி | 212219 ஏ |
| 212279 ஏ | 212294 ஏ |
| 213210 ஏ | 213210 பி |
| 213224 ஏ | 213226 ஏ |
| 213237 ஏ | 213245 ஏ |
| 213245 பி | 213245 சி |
| 213245 டி | 213245 ஈ |
| 213246 ஏ | 213265 பி |
| 213275 ஏ | 213275 பி |
| 213281 ஏ | 213281 பி |
| 213282 ஏ | 213293 ஏ |
| 213311 ஏ | 213311 பி |
| 213356 ஏ | 213376 ஏ |
| 213418 ஏ | 213418 பி |
| 205408 ஏ | 205408 பி |
| 205590 ஏ | 205603 ஏ |
| 205735 ஏ | 205764 ஏ |
| 205784 ஏ | 205784 பி |
| 205910 ஏ | 206180 ஏ |
| 206180 பி | 206180 சி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 202074 ஏ | 202074 பி |
| 202074 சி | 203754 ஏ |
| 205432 ஏ | 205839 ஏ |
| 205835 ஏ | 205972 ஏ |
| 205972 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 201718 ஏ | 201718 பி |
| 201718 சி | 205414 ஏ |
| 205737 ஏ | 205737 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 183391 ஏ | 183391 பி |
| 183391 சி | 183391 டி |
| 202012 ஏ | 202012 பி |
| 205559 ஏ | 205926 ஏ |
| 295926 பி | 205926 சி |
| 205948 ஏ | 206158 ஏ |
| 206158 பி | 206158 சி |
| 206181 ஏ | |

## லக்கி பிளாசாவில் சட்ட விரோத மின்சாரம்

### உரிமையாளர் மாயம்

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியிலுள்ள லக்கி பிளாஸா நவீனவர்த்தக கட்டட உரிமையாளர் மின் கட்டணத்தைக் கொடுக்காது சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடியை அவர் கடந்த 6 வருடங்களாகச் செய்துவந்ததாகவும்அதனால் மின்சார சபைக்கு 2 கோடி 35 இலட்சம் ரூபா நட்டம் விளைவித்ததாகவும் கூறப்படுகிறது.

மேற்படிகட்டடத் தொகுதியில் 58 வரையான வர்த்தக நிலையங்கள் உள்ளன என்றும் அந்த நிலையங்களிடம் மாதந்தோறும் மின்சார கட்டணங்களை அவர் பெற்றுவந்தார் என்றும் கூறப்படுகிறது.

அவருடைய இந்த மோசடியை அறிந்து அண்மையில் மின்சார சபை அதிகாரிகளும் பொலிஸாரும் மேற்படி கட்டடத் தொகுதிக்குச் சென்று அங்குள்ள உயர் அதிகாரிகள் மூவரைக் கைது செய்தனர்;

அத்துடன் அங்குள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களையும் விசாரணை செய்துள்ளனர்; அதேவேளை அக்கட்டடத் தொகுதியின் உரிமையாளர் மாயமாக மறைந்து விட்டார்; (எ)

## உலக அஞ்சல் தினம்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் தினம் இன்று உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது; (உ)

## இன்று ஒரு தகவல்

# புத்தியுள்ள சோம்பேறி

ஓர் ஊரிலே உழவன் ஒருவன் இருந்தான். அவனுக்குச் சோம்பேறியான மனைவி ஒருத்தி இருந்தாள். நாள்தோறும் அவன் காலையில் வயலுக்குச் சென்றுவிடுவான். நண்பகல் உணவை அவன் மனைவி எடுத்துக் கொண்டு வருவாள். சோம்பேறியான அவள் ஒரு நாள் கூட நேரத்தோடு உணவு எடுத்துச் சென்றதில்லை. மாலைநேரம் வயலிலிருந்து வீடு திரும்பினான் கணவன். தான்வாங்கி வந்திருந்த கோழியை மனைவியிடம் தந்தான். 'எனக்குக் கோழிக் கறியென்றால் உயிர். நாளைக்கு நீ ஒரு படி அரிசி போட்டுச் சோறு செய். அத்துடன் இந்தக் கோழியை நன்றாகச் சமைத்து எடுத்து வா. வழக்கம்போலத் தாமதமானால் உன்னைத் தொலைத்து விடுவேன்' என்றான் அவன்.

மறுநாள் காலையில் வழக்கம் போல அவன் வயலுக்குச் சென்றுவிட்டான். அவன் சென்ற பிறகு படுத்த அவளுக்கு நண்பகல் நேரத்தில் தான் விழிப்பு வந்தது. 'ஐயோ! கணவனுக்குச் சாப்பாடு கொண்டு செல்லவேண்டுமே! சமைப்பதற்கு நேரமில்லையே! கோபக்காரனான அவன் நன்றாக அடிப்பானே! என்ன செய்வது? என்று சிந்தித்தாள் அவள், கூடைக்குள் ஒரு படி அரிசியைக் கொட்டினாள். அதன் மேல் உயிருள்ள கோழியை வைத்து நன்றாக மூடினாள். அந்தக் கூடையைத் தூக்கிக் கொண்டு கணவன் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தாள் அவள்:

கோழிக்கறிச் சாப்பாடு வரும் என்று ஆவலோடு காத்திருந்தான் அவள் கணவன். நீண்டநேரமாகியும் சாப்பாடு வரவில்லை. பொறுமை இழந்த அவன் 'சோம்பேறிக் கழுதை இன்று உனக்கு நல்ல பாடம் கற்றுத் தருகிறேன்' என்று மனதிற்குள் கறுவினான். மாலை நேரம், தலையில் கூடையுடன் அசைந்து அசைந்து வந்தாள் அவள். கூடையை இறக்கித் தரையில் வைத்தாள். கோபங் கொண்ட அவன், 'ஏன் இவ்வளவு நேரம்? இனி மேல் இப்படித் தாமதமாக வருவாயா?' என்று சொல்லிக் கொண்டே அவளைப் போட்டு அடித்தான். அழுத அவள் 'கோழிக் கறியை உடனே சமைத்துவிட முடியுமா? வேக வேண்டாமா? உங்களுக்காகஎவ்வளவு கடினப் பட்டுச் சமைத்தேன் எவ்வளவு ஆசையாகக் கொண்டு வந்தேன்என்னைவீணாகஅடித்துவிட்டீர்களே! கணவன்சொல் தவறாத பத்தினி நான் என்பது உண்மையானால் கூடையிலுள்ள சோறு அரிசியாகட்டும், கோழிக்கறி கோழி ஆகட்டும்' என்று கத்தினாள்.

கூடையைத் திறந்து பார்த்தான் அவன் அதற்குள் உயிருள்ள கோழியையும், அரிசியையும் பார்த்த அவன் திகைப்பு அடைந்தான். மனைவியின் தந்திரத்தை உணராத அவன் 'நீ பத்தினி தான். இனி உன்னை அடிக்கவே மாட்டேன். என்னை மன்னித்துவிடு' என்றான்.

பேராசிரியர் எ. சோதி

# ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் சுமார் 2500 பேருக்கு செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கடந்த 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம்திகதி முதல் இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் சுமார் 2 ஆயிரத்து 500 செயற்கை அவயவங்கள் ஜெய்ப்பூர் செயற்கை அவயவ உற்பத்தி நிலயத்தால் பொருத்தப்பட்டுள்ளன.

இதில் 2 ஆயிரத்து 364 பேருக்கு கால் பகுதிகளும், 130 பேருக்கு கைப் பகுதிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அவயவங்கள் பொருத்தப்பட்டவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 854 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில்-131 பேரும், வவுனியா மாவட்டத்தில் 45 பேரும், மன்னார் மாவட்டத்தில் 73 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 102 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 162 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் -13 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 54 பேரும், பதுளை மாவட்டத்தில் ஒருவரும் அடங்குவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலேயே அதிகளவானவர்களுக்கு செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-104)

# வர்த்தகநிலையங்களின் புனரமைப்பு நிதி விரைவில் வழங்க ஏற்பாடு

(மந்திகை)

யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த சாவகச்சேரிப் பகுதி வர்த்தக நிலையங்களைப் புனரமைக்க வீட்டுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடனடிப்படையில் ஒரு இலட்சம் ரூபா வழங்குவதென உறுதியளித்துள்ளார்.

இதனை விரைவில் சம்பந்தப்பட்ட வர்த்தகர்களிடம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ-23)

# நூலக தினம்

(கந்தர்மடம்)

கோண்டாவில் விவேகானந்தா பொது நூலகத்தின் 6 ஆம் ஆண்டின் நிறைவையொட்டி இம்மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதிவரை மேற்படி நூலகம் நூலக தினத்தைக் கொண்டாடி வருகின்றது.

குறித்த காலப்பகுதியில் நூல் நிலையத்திற்கு நூல்களை அன்பளிப்புச்செய்ய விரும்புவோர் பிற்பகல் 4.00 மணி தொடககம் 6.30 மணி வரை நூல்களை தமக்கு வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளது. (எ-37)

# ஸ்ரீ. சு. க. பொதுச் செயலர் பதவியில் இருந்து திஸாநாயக்கா நிறுத்தம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கா இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை சுதந்திரக் கட்சியின் அரசியல் பீடம் கூடிய போது, இம் முடிவு எடுக்கப்பட்டதாக ஊடகத்துறை பிரதி அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

திஸாநாயக்காவின் பதவிக்கு மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரி பால ஸ்ரீசேன தெரிவு செய்யப்பட்டுள்ளார் என ஊடகத்துறைபிரதி அமைச்சர் மேலும தெரிவித்துள்ளார். (உ-7)

# மீள்பதிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களை கல்வியாண்டு 2001/2002 இற்கான மீள்பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு மீள்பதிவு மேற் கொண்டவர்களுக்கே வழங்கப்படுவதால் உடனடியாகப் பதிவை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-2)

# தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் சில

அண்மையில் வெளியான தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் சிலவருமாறு,

**யாழ். ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை**

என். கோபிகா, ரி. தர்ஷிகா கே. சோபிகா

**சுதுமலை சிம்மய பாரதி வித்தியாலயம்**

எம். சங்கீதா, கே.சுதர்சன் எஸ். ரனீஸ்சன், ஜே திருதியா, எம். பவித்திரா, ரி. ஜெசிந்தா

**யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை**

எஸ் மேகரா, என். விபுலன் பவந்திரன், யு. ஜெயந்தினி

**யாழ். கொக்குவில் மேற்கு சீ.சி.த.க பாடசாலை**

வ. விதுலன் நி. டிஜானி, ஜெ. நிரோஜினி, ரி. திவ்வியா, மா நுஷலா

**யாழ் மானிப்பாய்சென்சாள்ஸ் றோ. க.த.க. பாடசாலை**

இ. அபிரமி, ஜய ஸ்ரெபினா, பிரியதாஷிகா, ர. செந்தூரன், இ. ஜெசிக்கா, யோ. ஸ்ரொபானி, வி. றொபேக்கா [உ-201]

# சேக்கிழார் அடிப்பொடியின் சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேருரை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள தமிழக அறிஞர் சேக்கிழார் அடிப்பொடி நடராஜன் இராமச்சந்திரன். இன்றைய தினம்சொற்பொழிவுகள் நிகழ்த்தவுள்ள இடங்களின் விபரம் வருமாறு,

காலை 9மணி-ஏழாலைக்கு விஜயம் மேற்கொண்டு-சைவப்பெரியார் பண்டிதர் முத்தையாவுடன் சந்திப்பு

மு.ப.10.45மணி-தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தரிசனம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியைச்சந்திப்பு.

பி.ப.3மணி-யாழ்: பல்கலைக்கழக பட்டமளிப்பை ஒட்டி நடத்தப்பட்டு வரும் சேர் பொன். இராமநாதன் நினைவு பேருரையிலேபெரிய புராணத்தில் சமுதாயச் சிந்தனைகள் என்ற தலைப்பில் உரையாற்றுவார். (உ-19)

# கூடைப் பந்தாட்டம்

(வல்வெட்டித்துறை)

யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்டச்சங்க ஆதரவில் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில்இடம் பெற்றுவரும்யாழ். மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கூடைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் நாளையதினம்,

பி.ப 4 மணிக்கு யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் எதிர் உடுவில் மகளிர் கல்லூரியும்;

பி.ப4.45மணிக்கு யாழ் யாழ்ப்பாணக் கல்லூரிஎதிர் யாழ் பரியோவான் கல்லூரியும்மோதவுள்ளன. (உ 217)

# இன்று மதிய போசனம்

(யாழ்ப்பாணம்)

உலக அரிமாக்கள் சேவைகள் தினத்தையொட்டிபிராந்தியம் 10 இல் இயங்குகின்ற சுன்னாகம், மானிப்பாய் கோவிற்பற்று மற்றும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகங்கள் இணைந்து மூளாய் முதியோர்இல்லத்தில் மதியபோசனம் வழங்கும் செயற்றிட்டத்தினை இன்று மேற்கொள்ளவுள்ளன. (உ)

# செஞ்சிலுவைக்கு 34மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

இலங்கை சாவதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு யப்பானியஅரசாங்கம் 34 மில்லியன் ரூபாவை அன்பளிப்பு செய்துள்ளது.

கடந்த 3 வருடங்களில் 136 மில்லியன் ரூபா வினை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கியுள்ளதாக யப்பானிய தூதர் அலுவலகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (எ)

# வாதரவத்தை பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

(புத்தூர்)

யா/புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மிகுந்த ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக மாணவர் மட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப் படுகிறது.

மேற்படி பாடசாலையில் போதியளவு ஆசிரியர் இல்லாதிருந்த நிலையில் அங்கு கற்பித்து வந்த ஆசிரியர்கள் இருவர் இவ்வருடம் ஆசிரிய பயிற்சிககலாசாலைக்குத் தெரிவாகிச் சென்றுவிட்ட காரணத்தினால் கற்பித்தல் செயற்பாடுகளில் மிகுந்த பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவும்,

க. பொ. த (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இதனால் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (உ-235)

# மகாபொலவை பெற்றுக்கொள்க

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தில் கடந்த 22ஆம்திகதி நிகழ்ந்த யாழ்.பல்கலை மாணவர்க்கான மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில் தமது புலமைப் பரிசில்களைப் பெறத்தவறியமாணவர்களை காலம் தாழ்த்தாது யாழ். பல்கலைக்கழக நலச்சேவைக் கிளையுடன் தொடர்பு கொண்டு தமக்குரிய மகாபொல புலமைப் பரிசில் சான்றிதழ்களையும், காசோலைகளையும்பெற்றுக் கொள்ளுமாறு நலச்சேவை கிளை உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (உ-5)

# ஊடக கற்கை நெறி பாடத் திட்டத்தில் இணைப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு தொடக்கம், பத்தாம் பதினோராம் ஆண்டுகளுக்குரிய பாடவிதானத்தில் தொடர்பாடலும் ஊடக கற்கை நெறிகளும் என்ற பாடம் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இப் பாடநெறியை போதிப்பதற்கு எதிர்வரும் ஜனவரி தொடக்கம் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை 10ம், 11ம் ஆண்டுகளுக்கான பாடவிதானமும் நூலும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன. எதிர் வரும் காலங்களில் க. பொ. த உயர்தரத்திற்கும் இப் பாடநெறி சேர்த்துக் கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

## சிந்தனைக்கு விருந்து

### உள் நுழைந்த காளை

ஆளில்லா வீடென்றே ஆசையுடன் 'நேற்' ஏறிக்
காளையவன் உள்நுழையக் காத்திருந்த - ஆளவனைப்
பற்றிப் பிடித்துப் பழுதையாற் கட்டிவைத்து
வெற்றுடம்பில் விட்டார் அடி.

'பழையவன்'

பழுதை - கயிறு

# அமெ. படைகளின் அடுத்த இலக்கு ஆப்கானிஸ்தானுள் நுழைவதே

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலின் மீதான அமெரிக்க விமானத் தாக்குதல்களின் போது, இராணுவ, விமான ரீதியான எதிர்ப்புகள் முறியடிக்கப்பட்ட பின்னர் அமெரிக்கப் படையினர் ஆப்கானிற்குள் நுழையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

படையினர் உள் நுழைதலைத் துரிதமாக்கும் வகையில் காபூலில் உள்ள பிரதான விமான நிலையத்தை தாக்கி அழிப்பதே அமெரிக்காவின் தற்போதைய இலக்காக இருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை அமெரிக்கத் தாக்குதலை முறியடிக்கும் வகையில்பெருமளவிலான ஆப்கான் துருப்புக்கள் விமான நிலையத்தில் குவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் தாக்குதல் காரணமாக தலிபான்களின் உத்தியோக பூர்வ வானொலியான ஷெகெத்தின் குரல் சேவையினை நிறுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# விமான நிலையங்களில் பாதுகாப்பு தீவிரம்

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதலை அடுத்து அமெரிக்க விமான நிலையக் கட்டுப்பாட்டுக் கோபுர பாதுகாப்புகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் நியூயோர்க் மற்றும் வாஷிங்டன் நகரங்கள் மீது இடம் பெற்றதாக்குதலை அடுத்து மத்திய விமானப் போக்குவரத்துநிர்வாகம் தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்திவந்த போதும் தற்போது பாதுகாப்பை மேலும் அதிகரித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை அமெரிக்கத் தாக்குதலின் பின்னர் மூடப்பட்ட சில விமான நிலையங்கள் தற்போது திறக்கப்பட்டு தமதுவழமையான பணிகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (உ-7)

## பிரி. மீது சாடல்

[காபூல்]

ஆளும் தலிபானை அழிக்க வேண்டும்என அமெரிக்காவை பிரிட்டன் தூண்டிவிடுவதாக தலிபான் குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் வற்புறுத்தலினாலேயே ஆப்கான்குறித்த தமது நிலைப்பாட்டைபாகிஸ்தான் மாற்ற நேரிட்டதாகவும் பாகிஸ்தானிற்கான தலிபான் தூதுவர் குற்றம்சாட்டியுள்ளார். [உ-2]

உலக தரிசனம்

# அமெரிக்கத் தாக்குதல் மத்தியில் உள்நாட்டிலும் போர் மூண்டது

## தீரமுடன் எதிர் கொள்ளும் தலிபான்கள்

(வாஷிங்டன்)

ஆப்கானின் காபூல் மற்றும் நகரங்களின் மீதுநான்காவது தடவையாக நேற்றுக்காலை அமெரிக்க பிரிட்டிஷ்விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இதேவேளை, ஆப்கான் வடக்குக்கூட்டணிகாபூலுக்கு வடக்கே 50 கிலோ மீற்றர் தொலைவிலிருந்து தாக்குதலைத் தொடக்கியுள்ளது.

வான் தாக்குதலில்அமெரிக்கப் படைகள் 5பேர்விமானங்களைப் ஈடுபடுத்தியுள்ளன.

பல இலக்குகள் மீது 50க்கும் மேற்பட்டஏவுகணைகள் ஏவப்பட்டதாக பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

நேற்று முன்தினம் இரவு காபூல் கந்தகார் யலலாபாத் உட்பட பல இடங்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டன. இதில் 20 பேர் கொல்லப்பட்டனரென்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த முரட்டுத்தனமான தாக்குதலால் அப்பாவி மக்கள் பலர் இறந்துள்ளதாகப் பாகிஸ்தானிலுள்ளஆப்கான் தூதுவர் தெரிவித்தார்.

தலிபான் அரசின் வல்லமையை அடக்கும் முறையில் கவனமாக இலக்குகளைப் பார்த்து தாக்குதல் தொடர்வதாக அமெரிக்கஅதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தாக்குதலுக்கு வான் தரைப்பகுதிகளில் உதவ 40நாடுகள் முன்வந்துள்ளன. சில நாடுகள் நேரடியாகவே இணைந்து போரிட முன்வந்துள்ளனவென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# அமெரிக்காவின் தாக்குதலுக்கு ஆப்கானே பொறுப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு தலிபான்களே முழுப்பொறுப்பேற்க வேண்டும் என்று ஆப்கானின் முன்னாள் மன்னர் 'முகமட் ஷாகிஸ் ஹியாஸ்' கூறியுள்ளார்.

86 வயதினையுடைய 'முகமட் ஷாகிஸ் ஹியாஸ்' தற்பொழுது இத்தாலியில் அஞ்ஞாத வாசம் இருந்து வருகிறார்.

இவர் இத்தாலியில் இருந்து கொண்டே மேற்படி அறிக்கையைஆப்கானுக்கு அனுப்பி வைத்துளளார். (உ-7)

# அமெரிக்காவுடனான தொடர்பை துண்டிக்கா விட்டால் இரத்தக்களரி ஏற்படுத்துவோம்

## இந்தோ. ஜனாதிபதிக்குகால அவகாசத்துடன்எச்சரிக்கை

(ஜகார்த்தா)

உலகின் மிகப்பெரி இஸ்லாமிய நாடான இந்தோனேஷியாவின் தலைநகரான ஜகார்த்தாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிடப் போவதாக தீவிரவாத அமைப்பொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

'இஸ்லாமியப் பாதுகாப்பு அமைப்புக்களின் முன்னணி' என்ற பெயரில் இயங்கிவரும் தீவிரவாத அமைப்பு ஒன்றே இந்தோனேஷியாவிற்கும், அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளுக்கிடையேயும் உள்ள உறவை ஜனாதிபதி சுகர்ணோபுத்திரி துண்டிக்கா விட்டால் இம்முற்றுகை இடம்பெறும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், இந்தோனேஷியாவில்உள்ள வெளிநாட்டுதூதரகங்களை அழிக்கவும், மற்றும் வெளிநாட்டவர்களை கொன்று குவிக்கவும் முஸ்லிம்களை அணி திரட்டப் போவதாக அவ்வமைப்பு கூறியிருக்கின்றது.

அத்துடன் குறித்தகால அவகாசத்திற்குள் அரசாங்கம் திடமான முடிவெடுக்கத் தவறினால் பயங்கரவாத அமெரிக்காவையும் இந்தோனேஷியாவில் உள்ள அந் நாட்டவர்களையும் அழித்தொழிக்க புனிதப்போர் நடத்துமாறு முஸ்லிம்களை கேட்டுக் கொள்ள விருப்பதாகவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (உ-7)

# வேடனை நெருங்குவோர் வீணாக மண் கவ்வுவர்

## அப்துல்லா அனஸ் எச்சரிக்கை

[காபூல்]

ஒஸாமா பின்லேடனை கைது செய்வதற்கோ அல்லது அல்குவைட்டா அமைப்பை அழிப்பதற்கு மிகநீண்ட காலங்களே ஆகும். அப்படி அத்துமீறி பின்லேடனை நெருங்குவோர் மண் கவ்வ வேண்டி வரும் என்று அல்குவைட்டா அமைப்பின் சிரேஷ்டதலைவர் ஒருவருக்கு பயிற்சி அளித்த இஸ்லாமிய தீவிரவாதி ஒருவர் கூறியுள்ளார்.

அல்ஜீரிய தீவிரவாதியும், ஆப்கானின் சோவியத் துருப்புக்களிற்கு எதிரான யுத்தத்தின்போது அரபு. மற்றும் ஆப்கானிஸ்தானின் தலைவர் என்று அழைக்கப்பட்ட அப்துல்லா அனஸ் என்பவரே இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பின்லேடனிடம் 2000பயிற்சி பெற்ற உறுப்பினரே தற்போதுள்ளனர். ஆனாலும் 2000 என்ன அதற்கு குறைந்தளவு இருந்தாலும் அவரை கைது செய்ய முடியாது என்று அப்துல்லா அனஸ் தெரிவித்துள்ளார். (க-7)

## சட்ட விரோதமாக ஆட்களை கடத்திய முக்கிய புள்ளி கைது

[கன்பரா]

அவுஸ்திரேலியாவிற்குசட்ட விரோதமாக ஆட்களைக் கடத்தி வரும் முக்கிய புள்ளி ஒருவரை அவுஸ்திரேலிய பொலிஸார் கடந்த வெள்ளியன்று கைது செய்தனர்.

பலஸ்தீனரான இந்நபர் கடந்தஇருவருடங்களில்1700 பேரை மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அவுஸ்ரேலியாவிற்குள் சட்டவிரோதமாக அழைத்து வந்தார் என்றும் இவரது நடவடிக்கைகளை இருவருடங்களாக தாம் கண்காணித்துவந்ததாகவும்வெள்ளிக்கிழமை அன்று மேற்கு நாடொன்றிலிருந்து விமான மூலம் மத்தியஅவுஸ்திரேலிய விமான நிலையத்தில் வந்திறங்கிய போதே தாம் அவரைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் மீது ஆட்கடத்தலுடன் தொடர்புடைய 34 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-02)

# கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி

(ஹராரே)

சிம்பாவே அணிக்கும்இங்கிலாந்து அணிக்கும் இடையே ஹராரேயில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றஇரண்டாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில்துடுப் பெடுத்தாடிய சிம்பாவேஅணி49. 1ஓவரிற்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலிற்கு துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி 37.3 ஓவரில வெற்றி இலக்கை அடைந்ததுஇங்கிலாந்து அணி சார்பாக நைற் ஆட்ட மிழக்காது 85 ஓட்டங்ளைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. [க-02)

## தென்னாபிரிக்க அணிவென்றது

(டர்பன்)

தென் ஆபிரிக்காவில் நடைபெற்று வரும் இந்தியா, கென்யா,தென்ஆபிரிக்கஅணிகள் பங்குபற்றும் முக்கோண சர்வதேச ஒரு நாள் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் தென்ஆபிரிக்கா கென்யா இடையே நடைபெற்ற போட்டியில் தென் ஆபிரிக்கா அணி 7 விக்கெட்க்களினால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில்துடுப்பெடுத்தாடிய கென்யா அணி 7 விக்கெட் இழப்பிற்கு 159 ஓட்டங்களைப்பெற்றது பதிலிற்குதுடுப்பெடுத்தாடிய தென்ஆபிரிக்க அணி 33.4 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது. (உ-2)

# யுத்த முன்னெடுப்புகளால் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதிப்பு

(நியூயோர்க்)

பயங்கரவாதத்திற்கெதிராக அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் மேற்கொள்ளும் யுத்தத்தினால், புகலிடம் கோருவோரினதும் சிறுபான்மையினரினதும் உரிமைகள் மோசமாகப் பாதிக்கும் அபாயம் இருப்பதாகவும், அத்தகைய யுத்தத்திற்கு இடம் கொடுக்க வேண்டாம் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயப் பணிப்பாளர் றுட்ருபேட்ஸ் அமெரிக்கா மற்றும்மேற்குலக நாடுகளைக் கேட்டுள்ளார்.

அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் 57 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட நிறைவேற்று சபையின் கூட்டத்தொடரில் உரையாற்றும் போதே மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டார். (உ-2)

# இஸ். தீவிரவாத தலைவர் வீட்டுக்காவலில்

(இஸ்லாமபாத்)

ஜெமைத்தில் ஹீமா இஸ்லாமி என்ற தீவிரவாத இயக்கத்தலைவரை பாகிஸ்தான் வீட்டுக் காவலில் வைத்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் தலிபான் தீவிரவாத இயக்கத்தைத் தடை செய்யும் முதல் கட்ட நடவடிக்கையாக, இத்தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, 84 தலிபான் அமைச்சர்களினதும் கவணர்களினதும் வங்கிக் கணக்குகள் முடக்கப் பட்டுள்ளன என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

தீவிரவாதத் தாக்குதலுக்குத் திட்டம் தீட்டிவந்த ஒஸாமா பின்லேடனை பிடிப்பதற்கு அமெரிக்கா எடுக்கும் முயற்சிகளுக்கு பாகிஸ்தான் துணை நிற்க முன்வந்துள்ளமை தெரிந்ததே.

வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜெமைத்தில்ஹீமா இயக்கத்தலைவரான மௌலானா றுசுல்றகுமான், அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது. (து)

## கவிதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகஆங்கிலத்துறை விரிவுரையாளர் வைரமுத்து சுந்தரேசன் எழுதிய 'பாலையும்பயணமும்' கவிதைத்தொகுதிநூல் அண்மையில் வெளியிடப்பட்டது இந்நூலாசிரியரின் முன்னர் வெளிவந்தஇருநூல்கள்சாகித்திய விருது பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-104)

வினைவலியும் தன்வலியும்
மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்

குறள்

வலம்புரி

## கொள்ளி கொடுக்கும் பிரிட்டன்

ஆப்கான் மீதான தாக்குதலை அமெரிக்கப்படைகள் நேற்று முன்தினமிரவு ஆரம்பித்துள்ளன.

இத்தாக்குதலில் பிரிட்டன் படைகளும் இணைந்துள்ளன. அமெரிக்க நகரங்கள் மீதுநடத்தப்பட்ட விமானத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை ஒஸாமா பின்லேடனே நடத்தினார் என்ற முடிவின் அடிப்படையில் அவர் மறைந்திருப்பதாகக் கருதப்படும் ஆப்கான் மீது அமெரிக்கா தாக்குதல் தொடுத்துள்ளது.

அமெர்க்க நகரங்கள் மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதலால் அமெரிக்கா சீற்றம்கொள்வதுநியாயமானதாகலாம். அமெரிக்க நகரங்கள் மீதுநடத்தப்பட்ட தாக்குதலால் பொதுமக்கள் கொல்லப்பட்டதை மனிதநேயம் கொண்ட எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள. அதேவேளை ஆப்கானின் நகரங்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்?

அமெரிக்க நகரங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பயங்கரவாதமெனில் ஆப்கான் நகரங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பயங்கரவாதமென்ற பெயரை ஏன் சூட்டமுடியாது? வல்லவனுக்கும் வசதி படைத்தவனுககும் ஒரு நீதி, வலுவற்றவனுக்கும் வறுமையானவனுக்கும் ஒரு நீதி என்பதுபோல் உலக நாடுகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளது.

ஆப்கானின் நகரங்கள் மீது தாக்கி அந்நாட்டை அழிப்பதன் மூலம் பொது மககளே பாதிப்புறுவர் என்பது அமெரிக்காவற்கு தெரியாததல்ல. அதே நேரம் ஆப்கான் மீதான அமெரிக்காவின்தாக்குதல் மூன்றாம்உலகப்போருக்கு வழிவகுக்கும் என்பதும் அமெரிககாவுக்குப் புரியாததல்ல.

பொறுப்புள்ள ஒருநாடாக இருக்கவேண்டிய அமெரிக்கா, ஆப்கான் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் உலக அழிவின் கர்த்தாவாக தனனை அறிமுகம் செய்துள்ளது.

இவற்றுக்கு மேலாக அமெரிககாவின் சண்டித்தனத்திற்கு கொள்ளி எடுத்துக்கொடுக்கும்பிரிட்டனின் போக்கு பலரையும் விசனத்திற்குள்ளாககும் செயலாகும். சுருங்கக் கூறின் இது 'பிரிட்டனுக்குத்தேவையில்லாத தொழில்'

# ஜீரணம் குளுக்கோஸை உருவாக்க வேண்டும்

# இன்சுலின் நீரிழிவு நோயைக் குணப்படுத்தாது

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அடுத்ததாக, ஜீரணத்தின் முடிவில் கிடைக்கப் பெறும் ஊட்டச் சத்துக்களுள் ஒன்றான குளுக்கோஸ் இரத்தத்தில் கலக்கிறது. இந்தக் குளுக்கோஸ் கணையத்தைச் சென்றடைந்து அங்குள்ள சுரப்பு நீரைத் (இன்சுலினை) தூண்டி வெளிக் கொணர வேண்டும். ஆனால் தரம் குறைந்த நிலையில் இருக்கும் குளுக்கோஸானது இதற்கான செய்திறனை இழந்து விடுவதால், சுரப்பு நீர் சுரக்கப் படாமலே போகிறது.

### குளுக்கோஸ் கழிவுப் பொருள்

இவ்வாறாக உடலுக்குக் கேடான தரம் குறைந்த குளுக்கோஸ் தேவையற்றதாக இரத்தோட்டத்தில கலந்திருக்கும் போது, சிறுநீரகமானது இவற்றைப் பிரித்தெடுககிறது. இரத்தத்திலிருந்து இந்தக் கெட்ட குளுககோஸைப் பிரித்து இரத்தத்தைச் சுத்திப்படுத்துகிறது. சிறு நீர் மூலமாக வெளியேற்றப்படும் இந்தக் குளுக்கோஸ் வெறும் கழிவு நீர் தான் இது நம்மை பெரும் வியாதிகளிலிருந்து காப்பாற்றக் கூடியதாகவுள்ளது. நமது உடல் இயற்கையே கழிவுப் பொருளுக்குச் சமமாகக கருதும் போது அந்த இயற்கையான போக்குக்கு நேர்மாறாகக் கருதத் தேவையில்லை, கழிவுப் பொருளுக்குச் சமமான குளுக்கோஸை உடலுக்கு உகந்த சர்க்கரையாகப் பாவித்து அதன் அடிப்படையில் செயலாற்ற முனைகிறது முனைந்து கொண்டிருக்கிறது ஆங்கில மருத்துவம்.

நீரிழிவு நோய்க்காகக் கொடுக்கப்படும் மருந்துகள் ஒருக்காலும் நீரிழிவுநோயைக் குணப்படுத்த முடியாது. கட்டுப்படுத்தவும் முடியாது. மாறாக நிலைமையை மேன் மேலும் மோசமாக்கும், இதற்கான விளக்கத்தை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுமென்றால், ஆங்கில மருத்துவத்தின் அணுகு முறையின் அடிப்படை எப்படிப் பட்டது என்பதைத் தெரிந்து கொண்டாக வேண்டும். நீரிழிவு நோயைப் பற்றி ஆங்கில மருத்துவத்தின் அடிப்படை யாவது.

1) பான் கிரியாஸ்(கணையம்) என்ற உறுப்பு அதன் சுரப்பு நீரான இன்சுலினைச் சுரக்கவில்லை.

2) இதன் காரணமாக இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகமாகிறது.

3) அதிகப்படியான இந்த குளுக்கோஸ் சிறுநீரில் கலந்து வெளியாகிறது. இதுவே டயபிடீஸ் என்னும் நீரிழிவு நோயாகும்.

4) இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரித்தால் பல உடல்உறுப்புகளுக்கும் (இருதயம், இரத்தக் குழாய்கள், நரம்பு மண்டலம், சிறுநீரகங்கள், கல்லீரல் போன்ற உறுப்புக்கள்) பாதகத்தை விளைவிக்கும்.

5) கடைசியில் உயிருக்கே பாதகத்தை விளைவிக்கும்.

## மருத்துவ விளக்கம்

### அறிவு பூர்வமான விளக்கம் தேவை

மேற்கூறிய ஐந்து விஷயங்களும் தான் நீரிழிவு நோய் பற்றிய ஆங்கில மருத்துவத்தின் அடிப்படையாகும். இப்போது ஒவ்வொருஅடிப்படையும் அம்மருத்துவம் எந்த அளவுக்கு விளக்கமாகத் தெரிந்து கொண்டுள்ளது என்பதைப் பார்ப்போம்.

பான்கிரியாஸ் அதன்சுரப்பு நீரான இன்சுலினைச் சுரக்கவில்லை. இதன் விளக்கம் பரம்பரையில் தாய், தந்தைக்கு அல்லது மூதாதையர்களுக்கு இருந்திருககலாம் அப்படியானால் ஒன்றும் செய்ய முடியாது. முதன் முதலில் மூதாதையரில் ஒருவருக்கு தோன்றிய விதம் எப்படி என்பதற்கான விளக்கத்தைக்கூற மறுக்கிறது மூதாதையரில்எவருக்குமே இல்லாமல் முதன் முறையாக ஒரு நோயாளிக்கு வருவதன் காரணம் என்ன என்ற கேள்விக்கும் விடை கிடையாது. தாய் தந்தை இருவருக்கும் நீரிழிவு நோய் இருந்தால் 99 சதவிகிதம் குழந்தைக்கு வரும் என்கிறது மீதமுள்ள அந்த ஒருசதவிகிதம் (நூற்றில் ஒரு) குழந்தைக்கு இந்தநோய் ஏற்படாமல்காப்பாற்றியது எது? அந்த ஒரு குழந்தை பற்றிய விஷயத்தை அறியமுயற்சிகள்மேற்கொள்ள வில்லை.

ஒருவருக்கு 35 வயதில் நீரிழிவு நோய் வருகிறதென்றால் பிறந்தது முதல்35வயதுவரை நீரிழிவுநோயிலிருந்துஅவரைக் காப்பாற்றி வந்தது எது? என்பதற்கான விளக்கம் சுத்தமாகக் கிடையாது. அதற்கான முயற்சிகள், ஆராய்ச்சிகள் இதுவரை பூஜ்ஜியம் தான்.

இதுவரை சுரந்து வந்த பான்கிரியாஸ் தன் சுரப்பு நீரான இன்சுலினை ஏன் சுரப்பதினின்றும் நிறுத்திக் கொண்டது என்பதற்கான அறிவு பூர்வமான விளக்கம் சுத்தமாகக் கிடையாது.

இப்படிப்பட்ட கேள்விஞானத்தின் அடிப்படையில்தான் தன் சிகிச்சையை ஆரம்பிக்கிறது ஆங்கில மருத்துவம். நீரிழிவு நோய்க்கான காரணங்களும், விளக்கங்களும், ஞானமும் முக்கியமில்லை.

1. வைத்தியம் தான் முக்கியம். தெரிந்த வரைக்கும் வைத்தியத்தை ஆரம்பித்து விடுவது தான் நல்லது. காரணம்

2. இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகரிக்கிறது.

3. இந்த அதிகப்படியான சர்க்கரை சிறுநீரில்கலந்து வெளியாகும் போதுபல வீனம் ஏற்படும்.

4. இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிக்கும்போது பல உடல் உறுப்புகளுக்கும் பாதகத்தை விளைவிக்கும்.

5. மொத்தத்தில் உயிருக்கே உலைவைக்கும்.

### இதன் விளக்கம்

இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகமாக இருந்தால், உடலில் உள்ள நீர்ச்சத்துக்கள் சிறு நீர் மூலமாக அதிகமாக வெளியேறும். இதுஉடல் மொத்தத்திலும அயற்சியை ஏற்படுத்தும். உடலில் உள்ள இரத்தக் குழாய்களைப் பாழ்படுத்தி அவற்றிலிருந்து இரத்தக்கசிவை ஏற்படுததும். இது கண்களில் ஏற்பட்டால் கண் பார்வையை இழக்க நேரிடும். மூளையிலுள்ள இரத்தநாளங்களில் உடைப்பு ஏற்பட்டு இரத்தக் கசிவு ஏற்படுமாயின் பக்கவாதம் ஏற்படும். இரத்தக்குழாய்களில் இரத்த ஓட்டத்தில் தடையை ஏற்படுத்தும். இது நரம்பு மண்டலத்தைப் பாதிதது கை, கால்களில் எரிச்சல், மதமதப்பு, வலி போன்றவற்றை ஏற்படுத்தும். நாளடைவில் கைகால்களையே வெட்டி விட வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தும்.

இருதயத்திலோ சிறு நீரகத்திலோ செல்லும் இரத்தக் குழாய்களில் பாதிப்புகள் நிகழும்போது, இருதயமோ, சிறு நீரகங்களோ பழுதடையநேரிடும். இது எந்த நிலையிலும் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் என்பது தான் ஆங்கில மருத்துவத்தின் விளக்கம். மேலும் இந்த வியாதியைக் கட்டுப்படுத்த முடியுமே தவிர குணப்படுத்த முடியாது.

எனவே கட்டுப்பாட்டில்வைத்திருப்பதன் மூலம் மேற்சொன்ன அவ்வளவு விளைவுகளிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ளலாமென்று கணிக்கிறது.

நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதென்பது, இரத்தத்தில் குளுக்கோஸின் அளவைக் குறைத்து ஒரு குறிப்பிட்ட அளவில் வைத்திருப்பதாகும். இதன் அடிப்படையில் ஆங்கில மருத்துவம் முதலில் செய்கின்ற காரியம், உணவின் அளவைக் கணிசமாகக் குறைத்து விடுதல் ஆகும், இதற்காகக் கையாளும்முறை மிகத்தவறானதாகும் கிட்டத்தட்ட பட்டினி என்ற அளவுக்கு, குறைத்து விடுகிறார்கள். இதனால் உடல் மேலும் பல வீனம் அடையும்.

### ஜீரண உறுப்புகளில் திறன் குறைவு

ஏற்கனவே, ஜீரண சக்தியின் குறைவால உருவாகும், தரம் குறைந்த குளுககோஸை உடலானது ஏற்றுகொள்ளாமல் நிராகரிததுக கொண்டிருக்கிறது இந்த நிலையில் உணவு உட்கொள்வதைக் குறைத்துக் கொண்டிருக்கும், வழமையான உபயோகமான குளுக்கோஸையும் குறைத்து விடுகிறது இதன் காரணமாக வேகமாக உடல் இளைக்க ஆரம்பிக்கிறது. அத்துடன்உடலின் ஒட்டுமொத்த இயங்கும் திறனும் குறைகிறது.

அடுத்ததாக, ஆங்கில மருத்துவம், செய்யத்தகாத ஒருகாரியத்தில் முழுமூச்சாக ஈடுபடுகிறது அதாவது இரத்தத்தில் இருக்கும் குளுக்கோஸானது தரம் குறைநததும், உடலுக்கு ஒவ்வாததும் பாதகமானதும் ஆகுமென்று, உடல் இயற்கையே அந்தக் குளுக்கோஸைக் கழிவுப் பொருளென நிராகரித்து ஒதுக்கும் போது, அந்த குளுக்கோஸை-கழிவுப் பொருளை உடலுக்குள் வலுக்கட்டாயமாக உபயோகபபடுத்த எத்தனிக்கிறது ஆங்கில மருத்துவம், இந்தமுயறசியானது மிக மோசமானபின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது.

குளுக்கோஸின் தரம் குறைந்ததறகான காரணம், ஜீரண உறுபபுகளின் திறன் குறைவு மட்டுமே என்பதாக இருக்கும் போது, செயல திறன் குறைவுற்ற ஜீரண உறுப்பு எது என்பதைக கண்டறிந்து அதற்குத் தேவையானசக்தியளித்து அதன் இயககத் திறனை மீண்டும் நிலைபபடுததுவது ஒன்றே, நீரிழிவு என்னும் சர்க்கரை நோயைக் குணப்படுத்துவதற்கான சிறந்த வழியாகும. இதைத்தவிர்த்து விட்டு, கழிவுப் பொருளை வலுக்கட்டாயமாக உடல் உறுப்புகளின்செல் அணுக்குள் திணிக்கககூடிய மருநதுகளை உபயோகிக்கும்போது பாதகங்களை ஏற்படுத்தும்.


சென்னை டாக்டர் சகோதரர்கள்
**சித்திக் ஜமால்**
[M. B. B. S, D. C. C. H M. D. ACU).]
**பஸ்லுர் ரஹ்மான்**
[M. B. B. S. M R S H, LOND]


## தினசரி தியானம்

### சீர்திருத்தம்

வான் கெடுத்துத் தேடும்
மதிகேடர் போல எமை
நான் கெடுத்துத் தேடாமல்
நன்கறிவதெந்நாளோ?

-தாயுமானவர்

உன்னை நாடுகிற பெரு நாட்டத்தில் ஈசா நான் உன் மயம் ஆய்விடுகிறேன்.

எண்ணத்துக்கு ஏற்றவாறு புறவுலகம் காட்சி கொடுக்கிறது கெட்ட எண்ணமுடையவனுக்குப் புற வுலகில் கேடுமிக நிறைந்திருக்கிறது. எண்ணத்தை ஒழுங்குபடுத்துமளவு கேடு உலகினின்று அகன்று விடுகிறது. சீர்திருத்தம் யாவும் மனதில் இருக்கிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

### பயங்கரவாதிகளை ஆதரிக்கும்

# நாடுகளையும் தாக்கப் போவதாக ஐ.நா.சபைக்கு அமெரிக்கா அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் தவிர பிற நாடுகள் மீதும் பயங்கரவாதத்திற்கெதிராக தாக்குதலை தொடங்கப் போவதாகஅமெரிக்கா எச்சரித்துள்ளது:

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு எழுதியகடிதமொன்றிலேயேஅமெரிக்காமேற்கண்டவாறு எச்சரித்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, தற்காப்பைமுன்னிட்டு பயங்கரவாத அமைப்புக்களை ஆதரிக்கின்ற நாடுகள் மீது தாக்குதல்மேற்கொள்ளப்படும் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது;

இதேவேளை ஆப்கான் மீதான அமெரிக்காவின் தாக்குதலை பயங்கரவாதச் செயல் என்று தலிபான் கண்டித்துள்ளது.

பாகிஸ்தானுக்கான தலிபான் தூதுவர் அப்துல்சலிம் சாஹிர் இத்தாக்குதல் முஸ்லிம் உலகம் முழுவதும் நடாத்தப்பட்ட தாக்குதல் என வர்ணித்துள்ளார். (ந-4)

## முரண்பாடு கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் 'முரண்பாடுகளைத்தீர்த்தல்' கருத்தரங்கின் 13வது தொடர் இன்று காலை 9மணிக்கு உடுவில் மகளிர்கல்லூரியில் நடைபெறும்.

நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன்தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் உடுவில்மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சீ பி செல்லையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தேசியக் கல்வி நிறுவக விரிவுரையாளர்களான திருமதி புஷ்பா சின்னையா, திருமதி தனலஷ்சுமி வில்வநாதன். திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம் யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர்திரு.அ.குமாரவேல் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்குவர் (ந)

### நுண்கலை

சர்மிளா, கே.சுவர்ணலதா,கே.சுபாஜினி.என்.தவலோசனி,பி.தயாழினி, கே.உதயபிரியா,எஸ்.வசந்தகலா,எல்.ஜமுனா,வி.கவிதா, எப்.வில்லியம்ரதினி, கே.துர்க்கா, பி.நிஷாந்தராகினி,கே.நிஜா பி.ஜுலியற் பி.சங்கீதா, எம்.சுகன்ஜா. எஸ்.சசிலலிதா, ஆர்.தர்சினி, பி.தவபாலினி, எம்.வானதி, பி.யோகினி (வ)

### அமெரிக்க

எப்போது தேவையானாலும் உதவ இலங்கை தயாராக உள்ளது

சர்வதேசமட்டத்தில் பயங்கரவாதச் செயற்பாடுகளை தடைசெய்வதுடன் அதற்கு நிதி திரட்டும் வழிகளையும் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கதிர்காமர் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

### ஐக்கியதேசிய . . .

னத்தில் அரசுதோற்றுப்போய் பொதுத்தேர்தல் நடக்குமாயின் தேசியஐக்கியமுன்னணி என்ற புதியஅமைப்பின்மூலம் யானைச்சின்னத்தில் போட்டி இடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசியஐக்கியமுன்னணியில் இணையும் கட்சிகள் யானைச் சின்னத்தில் போட்டியிடாது தங்கள் கட்சிச்சின்னங்களில் போட்டியிடவிரும்பின் அச் சின்னங்களில் போட்டிஇடலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது-

இதேவேளை ஐக்கியதேசியக்கட்சியின் செயறகுழுக்கூட்டத்திலும் இத்தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது இந்நிலையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெற்றி பெறுவது உறுதிஎன்றும் ரணில்மேலும் தெரிவித்துள்ளார், (வ)

### மாற்றம்

சாங்கம் ஜே:வி.பி யுடன்கூட்டுச் சேர்ந்து பெரும் சிக்கலுக்குள் தவிக்கும் இந்நேரத்தில், ஜனாதிபதி தனது அதிகாரத்தினை பயன்படுத்தி பாராளுமன்றத்தை கலைக்கும் சந்தர்ப்பங்கள்அதிகம் உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ

### கொழும்பு

கல்லூரியில் ஆசிரியர் தின விழாவுக்கு செல்வதாக கூறிச் சென்றவர்கள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவிகளை தேடும்முயற்சியில் பொலிசார்ஈடுபட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் ஐவரை தீவிரமாக விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்;

இவர்களில் ஆட்டோசாரதி ஒருவர் மேற்படி பெண்களில் மூவரை தனது ஆட்டோவில்வந்து ஆமர் வீதியில் இறக்கியதாகவும்ஒருவர் கோட்டை புகையிரத நிலையத்தில் இறங்கியதாகவும் தெரிவித்துள்ளார், (இ)

### தமிழ்க்கட்சிகள் தமது

# பிரதிநிதியைத் தெரிவதில் இழுபறி நிலை நீடிக்கிறது

17வதுஅரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின்மூலம் அமைக்கப்படவுள்ள அரசியல்நிர்ணயசபைக்கு தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிஒருவரைத் தெரிவுசெய்வதில் தொடர்ந்தும் இழுபறிநிலைகாணப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி,ரெலோ, காங்கிரஸ்ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து மூவரைச் சிபார்சு செய்ய ஈ.பி.டி.பி. கட்சி தமது சார்பில் இரண்டாவது சந்தர்ப்பமாக ஓய்வு பெற்ற நீதியரசர் எஸ் சர்வாநந்தாவின் பெயரைச் சிபார்சு செய்துள்ளனர்

இந்நிலையில் அரசியல் நிர்ணய சபைக்கான தமிழர் பிரதிநிதி ஒருவரைத்தெரிவு செய்வதில் தொடர்ந்தும் இழுபறி நிலைகாணப்படுகிறது. (வ(

# இத்தாலி விமான விபத்தில் 118பேர் பலி

(ரோம்)

இத்தாலியின் வடபகுதி நகரான நிலாயின்லிமின் விமான நிலையத்தில் நடந்த விமான விபத்தொன்றில் 118 பேர் உயிரிழந்துள்ளார்களென இத்தாலிய போக்குவரத்து துறை அமைச்சு அறிவித்துள்ளது:

பயணிகளை ஏற்றி பறக்க ஆயத்தமான போது சிறு விமானமொன்றுடன் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று சவூதி அரேபிய விமானமொன்றில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து அவ்விமானம் ரோம் நகரில் தரை இறங்கியமையும் குறிப்பிடத்தக்கது; [ந-4]

### பொ. ஐ. ஐ. முன்

எடுத்துக் கொள்ளப்படும் போது அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொள்ளக் கூடிய வழிமுறைகள் தொடர்பாகவும, அமைக்கப்படவுள்ள அரசியல் நிர்ணயசபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வது தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் - முக்கியமாக பொருளாதாரச்சூழ்நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல் ஒன்றை நடத்துவதென்பது இயலாத காரியமாகும்;

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல் ஒன்றை நடத்தினாலும் அத்தேர்தல் மூலம் எந்த ஒரு கட்சியும் அறுதிப்பெரும்பான்மையை அடையாது போனால் மீண்டும் இதே தளம்பல் நிலையே அரசாங்கம் எதிர்நோக்க வேண்டியிருக்கும். இதுபாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்;

இந்நிலையில் நம்பிக்கையில்லாப்பிரேரணையில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுமாக இருந்தால் ஆட்சியை அமைக்கும் ஜனநாயக உரிமையை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்குவதில் எவ்வித சிரமமும் இருக்க மாட்டாது. எனவே இதுவிடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஒருதடவை அரசை அமைக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதில் எவ்விதமான குறையும் இல்லை என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இத்தகைய கூற்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், அரசாங்கக்கட்சி எம்பிக்களுக்கு பலத்த அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாக அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (வ)

### அமெரிக்கயுத்த . . .

லர் டொனால்றொம்சன் கருத்து தெரிவிக்கையில்;

பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை நாட்கணக்கில் அல்ல ஆண்டுக்கணக்கானாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமென்று கூறினார். (இ.4)

### நம்பிக்கையில்லாப்

கொள்ளப் படவுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அன்று மாலை 6 மணிக்கு வாக்கெடுப்பிற்கு விடப்படும் என்றும் சபாநாயகர் அறிவித்துள்ளார், (வ]


## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு அரியமலர்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பைவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு அரியமலர் 05.10.2001 வெள்ளிக்கிழமை காலமானார்,

அன்னார் முருகேசுவின் (3-ம் குறுக்குத்தெரு கொழும்பு11)அன்புமனைவியும்கலாஜோதி (பிரான்ஸ்) மாலாஜோதி (பிரான்ஸ்),ஜோதியனோகர்(லண்டன்) ஜோதிக்குமார், ஜோதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற ஐ.யோகம்மா, திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரியும் நகுலநாதன்(பிரான்ஸ்) குணராஜா (பிரான்ஸ்), சசிகலா,வதனா ஆகியோரின் மாமியாரும் சிரஞ்ஜீவ், நர்மதா, நிராஜ், சுரேனா, நிகிந்தா, சஜீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.10.2001) செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

மு: ஜோதிக்குமார் (மகன்)
674,பருத்தித்துறை வீதி, (சந்தியா மல்ரிகோட்யாட்)
நல்லூர். (3830)



UNIVERSITY OF JAFFNA
FACULTY OF SCIENCE

**Third Examination in Science (First Semester) 2001**

The above examination, which was scheduled to commence on 08.10.2001 has been Postponed by seven days.

There is no change in the day, time and the venue. All the dates have been Postponed by Seven days.

The Time – Table is displayed on the Notice Boards.

The lectures and practical classes for the Third year Second Semester will commence on 22. 10. 2001.

Registrar

[C/2692]



## வாழ்க !வளர்க! என வாழ்த்துகின்றோம்

யா/நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை-2001 இல் சித்தியடைந்து பெருமை தேடித் தந்த மாணவர்கள்;

1. கிருத்திகா தருமராசா 170
(மாவட்ட மட்டம 3ம் இடம்)
2. பகீரதி அருணகிரிநாதன் 157
3. ரதிகா ரவீந்திரன் 143
4. பிரதாப் கணேசராசா 133

ஆகியோரை வாழ்த்திப் பாராட்டுவதுடன் இவர்களை நெறிப்படுத்திய அதிபரையும், கற்பித்த ஆசிரியர்களையும், மற்றும் பெற்றோர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
நீர்வேலி. யா/சி. சி. த. க. பாடசாலை
[C/2693]





எழில் குன்றா தங்க- வைர ஆபரணங்களின் சாம்ராஜ்யம்

# நிருத்திகா ஜுவலர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P. 021 - 2694

(இ 2367)


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.